**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | DVC.5/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | ம.சா.1 |
| Name : | திருமதி. ராதா |
| Husband Name : | திரு. முருககணேஷ் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 30 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(மனுதாரர் ஆஜர்.)**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் கிளினிக் ஆரம்பிப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக அதற்கான உபகரணங்களை வாங்கினேன் என்றால் ஆரம்பிப்பதற்கு முன்பாக பாதி பொருட்களை வாங்கினேன். கிளினிக் ஆரம்பித்தபிறகு பாதி பொருட்களை வாங்கினேன். எந்த தேதியில் கிளினிக் திறந்தேன் என்றால் 10.05.2019ம் தேதி. கிளினிக் திறந்து 3–ல் இருந்து 6மாதத்திற்குள் தேவையான அனைத்து உபகரணங்களையும் வாங்கிவிட்டேன். கிளினிக் திறப்பதற்கு முன்பாக எனது சீதன நகைகளை வைத்து அதற்கான உபகரணங்களை வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் எதிர்மனுதாரரின் நகைகளும் இருந்தது என்றால் சரியல்ல. எந்த மாதத்தில் நகைகளை அடகு வைத்தேன் என்றால் 2019ம் வருடத்தில் நவம்பர் அல்லது டிசம்பர் மாதங்களில் என்று நினைக்கிறேன். 2019ம் வருடம் கிளினிக் திறப்பதற்கு முன்பாக உபகரண பொருட்களை எவ்வாறு வாங்கினேன் என்றால் அவசரத்திற்காக பைனான்சில் லோன் போட்டு வாங்கினேன். எனது பிரமாண வாக்குமூலத்திலும், எதிரிக்கும் எனக்கும் குடும்ப நீதிமன்றத்தில் O.P.No.226/2024 மனுவிலும், 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் "மருத்துவ உபகரணங்கள், லைசன்ஸ், மருந்துகள், டேபிள்

சேர் ஆகியவற்றை நான் எனது பெற்றோர்கள் வீட்டில் போட்ட நகைகளை வங்கியில் அடகு வைத்து தான் வாங்கினேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான ஆதரங்கள் மற்றும் வங்கியின் ஸ்டேமெண்ட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் "1ம் எதிர்மனுதாரர் கட்டிட பொறியாளராக இருப்பதால் ரூ.10லட்சம் கேட்டதன் பேரில் எனது பெற்றோர் வீட்டில் வாங்கி கொடுத்தேன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த வருடத்தில் மேற்கண்ட தொகையை 1ம் எதிர்மனுதாரருக்கு நான் வாங்கி கொடுத்தேன் என்றால் 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் பாதி, பாதி தொகையாக எனது பெற்றோர் வீட்டில் உள்ளவர்களின் நகைகளை அடகு வைத்து மேற்கண்ட தொகையை 1ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்தேன். மேற்கண்ட சங்கதிகளை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 08.03.2024ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் "தாங்கள் கட்சிகாரர் ரூ.10லட்சம் பணம் பெற்று வருமாறு கூறினார். எனது கட்சிகாரர் பணம் எதற்கு என்று கேட்டதற்கு தாங்கள் கட்சிகாரர் பொறியாளர் என்பதால் தனியாக கட்டுமான தொழில் செய்வதற்கு பணம் வேண்டும் என்று கேட்டுள்ளார். மேலும் தாங்கள் கட்சிகாரர் தொழில் தொடங்குவதற்காக எமது கட்சிகாரரை துன்புறுத்தி சீதன நகைகளையும், தாங்களின் கட்சிகாரரின் பெற்றோர்கள் எமது கட்சிகாரருக்கு அணிவித்த நகைகளையும், எமது கட்சிகாரரை அடித்து பிடுங்கி சென்று வங்கியில் அடமானம் வைத்துவிட்டார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரும் நானும் எனது பெற்றோர் வீட்டின் அருகில் குடியிருக்கும் போது எங்கள் இருவருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்ட பின்பு எனக்கு தேவையான பொருட்களை எந்த தேதியில் நான் எனது பெற்றோர் வீட்டிற்கு எடுத்து சென்றேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை ஜனவரி 2024ம் வருடம் 1ம் எதிர்மனுதாரர் அவருக்கு தேவையான பொருட்களுடன் எனது பொருட்களையும் சேர்த்து எடுத்து சென்றார். பின்னர் மீதம் இருந்த பொருட்களை நான் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். எதிர்மனுதாரர் எனது பொருட்களை எடுத்து சென்றதற்கான காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். எப்போது புகார் கொடுத்தேன் என்றால் அதே வருடத்தில் கொடுத்தேன். 18.03.2025ம்தேதி பெரம்பலூர் மாவட்ட துணை கண்காணிப்பாளரை எதிர்மனுதாரரின்

வீட்டிற்கு அழைத்து சென்று எனக்கு தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன் என்றால் சரிதான். அவை எனது கிளினிக் Certificate மற்றும் கிளினிக் தேவையான உபகரண பொருட்கள் மட்டுமே ஆகும். எனது பள்ளி, கல்லூரி சான்றிதழ்கள் மற்றும் சீதன பொருட்கள் எதுவும் எடுக்கவில்லை. எத்தனை வங்கிகளில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் மூன்று வங்கியில் உள்ளது. குமரன் என்ற முத்துகுமரனிடம் ரூ.35 லட்சம் பணம் கொடுத்து அவரிடம் பணம் கேட்டதற்கு அவர் 35லட்சம் காசோலை கொடுத்தன் பேரில் அது ரிட்டன் ஆனாதால் 18.10.2023ம் தேதி குமரன் என்ற முத்துகுமரனுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளீர்கள் என்றால் நானும் எனது கணவரும் சேர்ந்து தான் அனுப்பினோம். என்னிடம் காட்டப்படும் மேற்கண்ட அறிவிப்பில் நானும் எனது கணவரும் என்ற வார்த்தை இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 13.01.2024ம் தேதி 2ம் எதிர்மனுதாரருக்கு அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்பதற்காக தனது பெற்றோரிடம் ரூ.15லட்சம் வாங்கிவருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரும், 3ம் எதிர்மனுதாரரும் அரசு ஊழியர் என்றால் சரிதான். அவர்களை பொருத்த வரையும் அவர்களை சான்றவர்களை பொறுத்த வரையிலும் மருத்துவ காப்பீட்டு திட்டம் வழங்கப்பட்டு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட முறையில் 2,3 எதிர்மனுதார்களுக்கு காப்பிட்டு திட்டம் இருப்பதால் என்னிடம் அவர்கள் ரூ.15லட்சம் கேட்க அவசியம் இல்லை என்றால் 2,3 எதிர்மனுதார்கள் என்னிடம் ரூ.15லட்சம் கேட்கவில்லை, எனது கணவரான 1ம் எதிர்மனுதாரர் தான் மேற்கண்ட தொகையை என்னிடம் கேட்டார். மேற்கண்டவாறு இன்சூரன்ஸ் இருப்பது எனது கணவருக்கும் தெரியும் என்பதாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கிளினிக்கை காலி செய்யும் போது நான் 100க்கு கால் செய்தன் பேரில் SI புவனா அங்கு வந்தார் என்றாலும் நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்பதால் அவர் திரும்ப காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டார் என்றாலும் சரியல்ல. அதன் பிறகு இதே சம்பவம் குறித்து நான் பெரம்பலூர் காவல் நிலையத்தில் எதிர்மனுதார்களுக்கு எதிராக புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த புகாரை போலீசார் விசாரணை செய்து உண்மை, தன்னை இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட அதே சங்கதிகளை கொண்டு மேற்கண்ட புகாரின் மேல்

அதிகாரிகளை நான் அனுகி எதிர்மனுதார்களின் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தும் பயன் இல்லை என்பதால் நான் நீதிமன்றத்தை அனுகி எதிர்மனுதார்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஆணை பெற்று அதன்படி குற்ற எண். 945/2024 என்ற வழக்கு பதியப்பட்டுள்ளது சரிதான். நாங்கள் தனிகுடித்தனம் இருந்த வீட்டின் அருகில் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் எதிர்மனுதாரருக்கு எதிராக பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட விதத்தில் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் அதன்மேல் காவல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், மேல் அதிகாரிகளை நான் அனுகி எதிர்மனுதார்களின் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தும் பயன் இல்லை என்பதால் நான் நீதிமன்றத்தை அனுகி எதிர்மனுதார்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஆணை பெற்று அதன்படி குற்ற எண்.161/2024 வழக்கு பதியப்பட்டுள்ளது என்றாலும் அந்த குற்ற எண்ணும் பொருண்மை தவறு இருப்பதால் போலீசரால் வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. குமரன் என்கின்ற முத்துகுமரனுக்கு கொடுக்கப்பட்ட ரூ.35லட்சம் 1முதல் 3 எதிர்மனுதாரர்களின் பணம் என்பதால் அது குறித்து அவர் என்னிடம் கேட்டதால் தான் எங்களுக்குள் பிரச்சனை வந்து மேற்கண்ட பொய்யான புகார் கொடுத்து பொய் வழக்குகள் எதிர்மனுதாரருக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட ரூ.35லட்சம் தொகையை நானும் எனது பெற்றோரும் ஏமாற்றிவிட்டதாக கூறி 1ம் எதிர்மனுதாரரால் பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவில் புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண்.18/2025 என்ற வழக்கு என்மீதும் எனது அப்பா, அம்மா மீதும் பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மனுவில் கூறியது போல் எவ்வித சங்கதிகளும் நடைபெறவில்லை என்றாலும், மேற்கண்ட ரூ.35லட்சம் தொகையை ஏமாற்றுவதற்காகத்தான் மேற்படி வழக்கை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் நான் கோரிய பரிகாரங்கள் கிடைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.